**இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனம் - 2021**

----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கல்வி நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கல்வி நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கல்வி நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 134(3) | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வினால் மீளாய்வாண்டிற்குரிய உள்ளக கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குரிய 2021 ஆம் ஆண்டிலே தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வினால் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பந்தி | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் சபைக்கு வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 2015 வருடம் முதல் மீளாய்வாண்டு வரையும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 10 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | i. மீளாய்வாண்டிற்குள் வெளிவாரி விரிவுரை யாளர்கள் மற்றும் நேர்முகப் பரீட்சை குழுவிற்காக கட்டணமாக ரூபா 411,695 வும் மாணவர்களை உள்ளீர்ப்பதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைக்காக ரூபா 129,190 வும் சுற்றுநிருபத்திற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | அனுமதி கோரப்பட்டு பலமுறை அமைச்சிற்கு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அனுமதி வழங்கப்பட்டிருக்க வில்லை. செயற்பாடுகளை தாமதமின்றி நடாத்திச் செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற DMS 1670 இன் படி கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | முறையான அனுமதியொன்றை பெற்றுக் கொண்டு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii. | சுற்றுநிருப ஏற்பாடுகளின்றி பரீட்சை நடவடிக்கைகள், வகுப்புக்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை நடவடிக்கைகள், மற்றும் உதவியாளர் கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குள் ரூபா 292,750 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த மாணவர் உள்வாங்குவதற்கான பரீட்சை நடவடிக்கைகளுக்காக மாணவர்களிடமிருந்து ரூபா 500 வீதம் விண்ணப்பக் கட்டணமொன்று அறவிடப்படுவதுடன் அந்தப் பணம் இந்த பரீட்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. DMS 1670 மற்றும் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முறையான அனுமதியொன்றை பெற்றுக் கொண்டு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபம் | மீளாய்வாண்டிற்காக வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சென்ற வருடம் பொருட்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன்போது அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளை சீர்செய்து இந்த வருடத்திற்குள் பொருட்கள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்தின் அறிவுரையின் பிரகாரம் வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 768,653 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,904,668 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,673,321 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சேவைகள் செலவினம் ரூபா 5,060,207 வினால் அதிகரித்தல் பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் நிறுவனம் | காணியை உரித்தாக்கிக் கொள்வதற்கு அமைச்சரவைக்கு கோறிக்கை | காணியை உரித்தாக்கும் பணிகள் |

| | | |
|---|---|---|
| அமைந்துள்ள 0.427 ஹெக்ரேயரான காணியை சட்டரீதியாக உரித்தாக்கிக் கொள்வதற்கு தவறியிருந்தது. | யிடப்பட்:ள்ளதோடு இன்று வரை அதற்கான எந்தவொறு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. | விறைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாடநெறிகளுக்காக கல்விசார் பதவியணியினரில் இரண்டு விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் மாத்திரம் காணப்பட்டபோது 35 வெளிவாரி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புக்குட்படுத்தி அவர்களுக்காக 2020 மற்றும் 2021 வருடங்களுக்காக முறையே ரூபா 621,555 மற்றும் ரூபா 1,046,950 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த போதிலும் வருடத்திற்குள் இடம்பெற்ற 10 பாடநெறிகளுக்குரிய வெளியிடப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களின் பரீட்சை சித்தியடைந்தோரின சதவீதம் நூற்றுக்கு 12.5 இல் இருந்து நூற்றுக்கு 74 வரை குறைந்த வீச்சில் காணப்பட்டது. | இரத்மலானை பல்கலைக்கழக நிறுவனத்திற்குள் அனைத்து பாடநெறிகளும் இடம்பெறுவது ஆங்கில மொழி மூலமேயாகும். மேலும் கடினமான பாடங்களும் பாடநெறி உள்வாங்கலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடினமான பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பித்து உயர்ந்த பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாதது பிரதான காரணமாக காணப்படுவதுடன் இந்த நிலைமைக்கு தீர்வாக மாணவர்களை உள்வாங்கும் போது தகைமைகளை மாற்றியமைப்பதற்கும் மாணவர்களுக்கு பொருந்தக்கூடிய வகையில் பாடநெறியை திருத்தியமைப்பதற்கும் இப்போது கல்விசார் பதவியணியினர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். | பாடநெறி ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆங்கில பாடநெறி நடாத்தப்பட்டு மாணவர்களின் சித்தியடையும் சதவீதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ப ட வேண்டும். |